தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
DHINATH DHALAM Tamil & English daily Paper
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 128 · புதன்கிழமை Wednesday · 05.08.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# ரூ.113 கோடியில் புதிய மருத்துவக் கட்டிடங்கள்

## முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார்



ரூ.113 கோடியில் புதிய மருத்துவக் கட்டடங்களை முதல்-அமைச்சர் விஜய் திறந்து வைத்தார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக 113 கோடி ரூபாய் செலவில் அறந்தாங்கி அரசு மாவட்டதலைமைமருத்துவமனை.பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை, ஆத்தூர், மரக்காணம் மற்றும் வளவனூர் அரசு மருத்துவமனைகளில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள், கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கதிரியக்க சிகிச்சை மையம், புதிதாகக் கட்டப்பட்டுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 12 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 2 வட்டார பொது சுகாதார அலகுகள் ஆகியவற்றைத் திறந்து வைத்து, நவீன மருத்துவ உபகரணங்களின் பயன்பாட்டையும் தொடங்கி வைத்தார்.

புதுக்கோட்டைமாவட்டம், அறந்தாங்கி அரசு மாவட்டதலைமைமருத்துவமனை

புதுக்கோட்டைமாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனை தற்போது 174 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு 46 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கூடுதல் கட்டடமும், 2.81 கோடி ரூபாய் செலவில் அதிநவீன உபகரணங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, அடிப்படைக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு மாவட்டதலைமைமருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இக்கூடுதல் கட்டடத்தின் தரைத்தளத்தில் வெளி மருத்துவப் பயனாளர்கள் பிரிவு,அவசர சிகிச்சைப் பிரிவு, இசிஜி, எக்கோ, எக்ஸ்ரே, சிடி ஸ்கேன், முதல் தளத்தில் அறுவை அரங்கு, இரத்த சுத்திகரிப்புப் பிரிவு,காது, மூக்கு, தொண்டைப் பிரிவு, இரண்டாம் தளத்தில் குழந்தைகள் நலப்பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு,ONE STOP CENTRE, மூன்றாம் தளத்தில்-பெண்கள் மற்றும் ஆண்கள் உள்பயனாளர்கள் பிரிவு, இரத்த வங்கி, நான்காம் தளத்தில் முதல்-அமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிகிச்சைப் பிரிவு, விஷமுறிவு சிகிச்சைப்பிரிவு,ஐந்தாம் தளத்தில் உள்மருத்துவப் பயனாளர்கள் சிறப்பு சிகிச்சைப் பிரிவு, மருந்துப் பொருட்கள் அறை, நிர்வாக அலுவலகம், ஆறாம் தளத்தில் அறுவை அரங்கு, அறுவை சிகிச்சைக்குப்பின் கவனிப்புப் பகுதி ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசு மருத்துவமனையானது. தற்போது 140 படுக்கை வசதிகளுடன் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, திறன்மிகு தீக்காய சிகிச்சைப் பிரிவு மற்றும் பச்சிளங்குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனையைத் தரம் உயர்த்திடும் வகையில் 28.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீவிர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு (Maternal Child Health Wing) இரண்டையும் ஒருங்கிணைத்து ஒரே கட்டடமாகத் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், 3.85 கோடி ரூபாய் செலவில் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. மேலும், இக்கட்டடத்தில்புறக்காவல்நிலையம், மைய ஆக்சிஜன் அமைப்பு, சிசிடிவி கேமராக்கள், LAN இணைப்புகள், தீத்தடுப்பு உபகரணங்கள், மின்தூக்கி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு கூடுதலாக 50 படுக்கைகளும், மகப்பேறு பிரிவிற்கு கூடுதலாக 100 படுக்கைகளும் அதிகரித்து, ஏற்கனவே உள்ள 140 படுக்கைகளுடன் கூடுதலாக இந்த 150 படுக்கை வசதிகளையும் சேர்த்து மொத்தம் 290 படுக்கை வசதிகள் கொண்டதாக சிவகாசி அரசு மருத்துவமனை மேம்படுத்தப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனை தற்போது 36 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் 1.05 கோடி ரூபாய் செலவில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.இக்கூடுதல் கட்டடத்தில், காத்திருப்பு அறை, மருத்துவக் கிடங்கு, நுண்கதிர் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, ஆய்வகம், முதன்மை மருத்துவ அலுவலர் அறை. உள் மருத்துவப் பயனாளர்கள் அறை, கழிவறைகள் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம்,ஆத்தூர் அரசு மருத்துவமனை

திண்டுக்கல் மாவட்டம்,ஆத்தூர்,அரசு மருத்துவமனை தற்போது 60 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் 3.50 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் முதல் தளத்துடன் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கூடுதல் கட்டடத்தின் தரைத்தளத்தில் நுண்கதிர் அறை, முதல்-அமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டப் பிரிவு, ஆய்வகம். மருத்துவப் பயனாளிகள் கழிப்பறை, மருந்துக்கிடங்கு. முதல் தளத்தில் அறுவை அரங்கம், மருத்துவர் அறை. அறுவை சிகிச்சைக்குப்பின் கவனிப்பு அறை ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## முதலமைச்சர் விஜய்க்கு எதிரான அவதூறு பேச்சு:

# எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது



உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக தஞ்சை போலீசார் 6 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

தஞ்சை பனகல் கட்டிடம் முன்பு தி.மு.க. சார்பில் நேற்று காலை ஆர்ப்பாட்டம் நடந்தது. காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் த.வெ.க. அரசின் மெத்தனப்போக்கை கண்டித்தும், விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடிசெய்யவேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறிய த.வெ.க. அரசை கண்டித்தும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சட்டசபை எதிர்க்கட்சி தலைவரும் மற்றும் தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர், காவிரி டெல்டாவில் உள்ளஆறுகள்அனைத்தும் இன்றைக்கு வறண்டு, கிட்டத்தட்ட ஒரு பாலைவனம்போல் காட்சி அளித்துக்கொண்டு இருக்கிறது. இதே நேரத்தில் நம்முடைய தலைவர் முதல்-அமைச்சராக இருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா? நம் தலைவர் இந்த நிலைமை ஏற்பட விட்டிருப்பாரா? என்றார். தொடர்ந்து முதல்-அமைச்சர் விஜய்க்கு எதிராக அவர் இரட்டை அர்த்தத்தில் ஒரு கருத்தை கூறினார். இது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவரது பேச்சுக்குதவெகநிர்வாகிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக, உதயநிதிக்குஎதிராகதஞ்சை காவல் நிலையத்தில் த.வெ.க.மகளிரணி சார்பில் புகார் அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, உதயநிதிக்கு எதிராக 6 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. உதயநிதி ஸ்டாலினை கைது செய்வதற்காக தஞ்சையில் இருந்து போலீஸ் குழு இன்று காலையில் சென்னை வந்தது. சென்னை நீலாங்கரை யில் உள்ள உதயநிதிஸ்டாலின்வீட்டுக்கு வந்த அவர்கள், தஞ்சையில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் உதயநிதி ஸ்டாலினிடம் விசாரணை நடத்தி அவரை கைது செய்ய வந்திருப்பதாக கூறினர். இதுபற்றி உதயநிதியின் குடும்பத்தினரிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும், வழக்கறிஞர்களுடன் கலந்து பேசி முடிவெடுக்க கால அவகாசம் வேண்டும் என அவர்கள் தரப்பில் போலீசிடம்கூறப்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்த தி.மு.க. நிர்வாகிகள் அங்கு குவிந்தனர். நேரம் செல்லச்செல்ல திமுக தொண்டர்கள் ஏராளமானோர் குவிந்தனர். கைது செய்ய எதிர்ப்பு தெரிவித்து முழக்கம் எழுப்பினர். இதனால் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர். தொண்டர்களை கட்டுப்படுத்தும் பணியில் போலீசார் ஈடுபட்டனர். கூட்டம் அதிகரித்த நிலையில், தொண்டர்களை வேனில் ஏற்றி அழைத்துச் சென்றனர்.

பின்னர் உதயநிதியை போலீசார் கைது செய்து விசாரணைக்காக தஞ்சைக்கு அழைத்து சென்றுள்ளனர். இந்த சம்பவத்தால் உதயநிதியின் வீட்டின் முன்பு பெரும் பரபரப்பும் பதற்றமும் நிலவுகிறது. கைது நடவடிக்கைக்கு எதிராக தொண்டர்கள் தொடர்ந்து முழக்கம் எழுப்பினர்.

தஞ்சையில் அவதூறாக பேசினார் என உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக தேசிய மகளிர் ஆணையத்தில் த.வெ.க. சார்பில் புகார் அளிக்கப்பட்டு உள்ளது. கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் பழ. செல்வ குமார் தேசிய மகளிர் ஆணைய தலைவருக்கு புகார் மனு அனுப்பினார். அதில், உதயநிதியின் பேச்சு, காணொளியை அடிப்படையாக கொண்டு ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு உள்ளது.

உதயநிதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை மற்றும் வழக்கு பதிவு செய்ய காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலினின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து தமிழ்நாட்டில் ஈரோடு உள்பட பல்வேறு மாவட்டங்களில் த.வெ.க. மகளிர் அணி நிர்வாகிகள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## "எதிர்க்கட்சித் தலைவர் இல்லாமல் பேரவையை நடத்த நினைக்கிறது த.வெ.க. அரசு" எடப்பாடி பழனிசாமி விமர்சனம்



அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-


சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடிய உதயநிதி ஸ்டாலின் அவர்களை காவல்துறைகைதுசெய்திருக்கிறது.உதயநிதிக்கு நாவடக்கம் தேவை என்பதை நாம் பல ஆண்டுகளாக கூறி வருகிறோம். தான் இருக்கும் பொறுப்பின் மாண்பு அறியாமல் அவர் தொடர்ந்து வாய்க்கு வந்தபடி பேசுவதும்,பெண்களை இழிவாக பேசுவதும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. அவரது பேச்சுக்கு வழக்கு பதிவது என்பது வேறு. ஆனால், நாளை பட்ஜெட் கூட்டத்தொடர் துவங்கும் நிலையில், இன்றைய தினம்சட்டமன்றஎதிர்க்கட்சித் தலைவரை இந்த பொய்க்கால் குதிரை அரசு கைது செய்யத் துடிப்பது என்பது, இது வழக்கைத் தாண்டிய அரசியல் பின்புலம் கொண்டதோ என்ற சந்தேகத்தை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் என்ற பொறுப்பு சட்டமன்றத்தின் முக்கிய அங்கம். அந்த பொறுப்பில் உள்ளவர் இல்லாமல் முடக்கிவிட்டு சட்டப்பேரவை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த பொய்க்கால் குதிரை அரசு செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது.

அதேபோல், நாளை சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும் நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் மீதான கைது நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும் என இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைலாசநாதர் மலைக் கோயிலில் ஆடிப்பெருக்கு முன்னிட்டு சிறப்பு வழிபாடு




தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில் ஆடிப்பெருக்கு முன்னிட்டு திங்கள்கிழமை காலை 7.00மணி முதல் வழிபாடுசிறப்பாகநடைபெற்றது கைலாசநாதர்க்கும் பெரியநாயகி அம்பாளுக்கும், திருமஞ்சனம், பால், தயிர் இளநீர்,சந்தனம்.பஞ்சாமிர்தம் தேன், பன்னீர் மற்றும் பல வகை மூலிகை திரவியங்கள் கொண்டு அபிஷேகம் நடைபெற்று அதன் பின் அலங்காரம்செய்துதீபாராதனைகள் நடைபெற்றது

உலக நன்மைக்காக கூட்டு வழிபாடும் நடைபெற்றது அதிக பக்தர்கள், கலந்து கொண்டு எம்பெருமான் கைலாசநாதர் அருள் பெற்றுச் சென்றனர் அன்ன பிரசாதம் கட்டளைதாரர்கள் கள்ளிப்பட்டி திரு க.சிவக்குமார் பெரியகுளம் R.கருப்பையா ஆசிரியர் அவர்கள் வழங்கினார்கள் ஏற்பாடுகளை அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவினர்கள் சார்பாக செய்திருந்தனர்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரரசர் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதிஸ்டாலின்அவர்களின்கைதுகண்டித்துத.வெ.கஅரசைகண்டித்துகள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் ரிஷிவந்தியத்தின் நிரந்தர சட்டமன்ற உறுப்பினர் ஆற்றல் மிகு அண்ணன் வசந்தம் க.கார்த்திகேயன் அவர்களின் வழிகாட்டலில் ஒருங்கிணைந்த திருக்கோவிலூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆசனூர் திருச்சி நெடுஞ்சாலையில்கண்டனஆர்ப்பாட்டம்சாலைமறியல்செய்துகைதானபோதுதலைவர் கலைஞரின் கழக உடன்பிறப்புகள்



# உதயநிதி ஸ்டாலின் கைது நடவடிக்கையை கண்டித்து திருக்கோவிலூரில் தி.மு.க.வினர் சாலை மறியல் – ஏராளமானோர் கைது

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினைகைதுசெய்த த.வெ.க. அரசை கண்டித்து, கழகத் துணைப் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான முனைவர் பொன்முடி மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டதி.மு.க.நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திருக்கோவிலூர் நகரில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒன்றியக்கழகச்செயலாளரும் (திருக்கோவிலூர் கிழக்கு),கள்ளக்குறிச்சி மாவட்ட ஊராட்சி குழு துணைப் பெருந்தலைவருமான மு.தங்கம், விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர்டி.என்.முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஜி. ரவிச்சந்திரன், அ.சா. பிரபு, கு. தீனதயாளன், லூயிஸ், திருக்கோவிலூர் நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன் மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராயல் அன்பு ஆகியோரின் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

சாலை மறியலில் ஈடுபட்ட கட்சியினரை திருக்கோவிலூர் காவல்துறையினர் கைது செய்து, வாகனங்களில் ஏற்றி அருகிலுள்ள மண்டபத்தில் தங்க வைத்தனர்.

# உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வேப்பூரில் திமுகவினர் ஆர்ப்பாட்டம்; போலீசார் கைது



சென்னைநீலாங்கரையில்உள்ளதனதுஇல்லத்தில், தஞ்சாவூரில் நடைபெற்ற காவிரி உரிமை தொடர்பான போராட்டத்தில் நிகழ்ந்த சர்ச்சை தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை போலீஸார் ஆகஸ்ட்4நேற்றுசெவ்வாய்க்கிழமைகைதுசெய்தனர். இந்த கைது சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகம் முழுவதும் திமுகவினர் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அதன் ஒரு பகுதியாக, கடலூர் மாவட்டம் வேப்பூர் கூட்ரோட்டில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் நல்லூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பாவாடை கோவிந்தசாமி தலைமையில் திமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், மாநிலஅரசுக்குஎதிராகவும்முழக்கங்கள்எழுப்பினர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த வேப்பூர் போலீஸார், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினரை கைது செய்து, அருகிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். ஆர்ப்பாட்டம் காரணமாக வேப்பூர் கூட்ரோடு பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# வேப்பூரில் குறுவட்ட அளவிலான பாரதியார் தினம், குடியரசு தின விளையாட்டு மற்றும் தடகளப் போட்டிகள்



கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டத்திற்குட்பட்ட கண்டப்பங்குறிச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ பவானி வித்யாஸ்ரம் பள்ளியில், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை சார்பில் வேப்பூர் குறுவட்ட அளவிலான பாரதியார் தினம் மற்றும் குடியரசு தின விளையாட்டு, தடகளப் போட்டிகள் நேற்று ஆகஸ்ட் 4 செவ்வாய்க்கிழமை கோலாகலமாக நடைபெற்றன.

பள்ளி வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தொடக்க விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வேப்பூர் காவல் நிலைய ஆய்வாளர்ரவிச்சந்திரன் கலந்து கொண்டு போட்டிகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவர்கள் விளையாட்டிலும் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும் என்றும், ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் விடாமுயற்சியே வெற்றிக்கான அடித்தளம் என்றும் வலியுறுத்தி சிறப்புரையாற்றினார்.

விழாவிற்கு ஸ்ரீ பவானி கல்வி நிறுவனங்களின் தாளாளர் நாராயணன் தலைமை வகித்தார். கல்வி நிறுவனங்களின் செயலாளர் மகாலட்சுமி நாராயணன் முன்னிலை வகித்தார்.

இப்போட்டிகளில் விருத்தாசலம் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 400–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு பல்வேறு தடகள மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

விழா ஏற்பாடுகளை பள்ளியின் நிர்வாக அலுவலர் பொன். சடையமுத்து, தலைமை ஆசிரியர் ஜெஸ்வந்தி மற்றும் உடற்கல்வி ஆசிரியர் காந்தி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் பவானி உடற்கல்வியியல் கல்லூரி முதல்வர் சிதம்பர ராஜா, கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் பாலமுருகன், கல்வியியல் கல்லூரி முதல்வர் கண்ணன், பார்மஸி கல்லூரி முதல்வர் செந்தில், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் திரளாககலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# சத்து மாத்திரைகள் சாப்பிட்ட 6ஆம் வகுப்பு மாணவி மயக்கம்; ஆசிரியர் மீது பெற்றோர் புகார்!



கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்து மாத்திரைகளை அதிகமாக உட்கொண்ட 6–ஆம் வகுப்பு மாணவி மயக்கமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். மாணவர்களை முறையாக கண்காணிக்க தவறியதாக ஆசிரியர் மீது நடவடிக்கை கோரி பெற்றோர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தனர்.

# ஆலங்குளம் அருகே அண்ணாமலை வீ த லீடர்ஸ் உறுப்பினர் சேர்க்கை முகாம்



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே வெங்கடேஸ்வரபுரம் (எ) ரெட்டியார்பட்டி பேருந்து நிறுத்தத்தில் அண்ணாமலை வீ த லீடர்ஸ் சார்பில்உறுப்பினர்சேர்க்கை முகாம் நடைபெற்றது.

வெங்கடேஸ்வரபுரம் பேராசிரியர் எஸ். சிவசங்கர் அவர்களின் ஆலோசனையின்படி, மருத்துவர் அன்புராஜ் ஏற்பாட்டில், மாவட்ட உறுப்பினர் சேர்க்கை நிர்வாகி கந்தசாமி தலைமையில் முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகி சித்ரா முன்னிலை வகித்தார்.

மேலும் முத்துக்குமரன், கஜேந்திரன், துரைமுருகன், பார்த்தசாரதி, வரதன், கிருஷ்ணமூர்த்தி,அருள்செல்வன், வெள்ளையதேவன், கணேசன்,சிவப்பிரகாசம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கை பணிகளை சிறப்பாக முன்னெடுத்தனர்.

# "உதயநிதி பேசியது நாகரிக அரசியலுக்கு ஏற்புடையதல்ல" திருமாவளவன் பேச்சு



சென்னை: "நாளை சட்டமன்றம் கூடும் சூழ்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலிருப்பவரைச் சிறைப்படுத்துவதைத் தவிர்ப்பது ஆளுங்கட்சியின் மீதான நன்மதிப்பை உயர்த்தும்" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள தனது எக்ஸ் தளப் பதிவில், "அண்மையில் திமுக சார்பில் காவிரி நீர் உரிமைக்காக தஞ்சையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், 'இரட்டுற மொழிதல்' என்னும் வகையில் எள்ளி நகையாடும் கருத்தொன்றைக் கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சிகளின் மீது பொய் வழக்குப் போடுவதிலேயே முதல்வரின் கவனம் இருக்கிறது என்று அவர் சொல்லியபோது, ஆங்கே திரண்டிருந்தவர்கள் பிரபல நடிகை ஒருவரின் பெயரைச் சொல்லிக் கூச்சலிடுகின்றனர்.

அப்போது அவர் கிண்டலாகப் பேசும் முனைப்பில் தவறான பொருள்படும்படி ஒரு கருத்தைப் பேசியுள்ளார். இது ஆங்கில ஊடகங்களில் விவாதிக்கும் அளவுக்கு – கண்டிக்கும் அளவுக்கு தேசிய அளவிலான பிரச்சினையாக மாறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் என்கிற பொறுப்பு வாய்ந்த இடத்தில் இருப்பவர் இதுபோல இரட்டை பொருள் தரும் 'எள்ளல் நடையில்' பேசும் முறையைத் தவிர்த்திருக்க வேண்டும். ஒரு பெண்ணைக் குறித்து இழிவாகப் பேசும் இத்தகைய அணுகுமுறை அவரது அரசியல் தகுதிக்குப் பொருத்தமானதில்லை. நாகரிக அரசியலுக்கு ஏற்புடையதல்ல.

சூழ்ந்திருப்பவர்களின் சுவைக்கேற்ப சொல்லாடல் செய்வது என்கிற உந்துதலால் உணர்ச்சிவயப்பட்ட – தன்னிலை மறந்த அணுகுமுறையைக் கைவிட வேண்டும். பெண்மையைக் கொச்சைப்படுத்தும் வகையில் புரிதலை ஏற்படுத்திய அந்த அணுகுமுறை கண்டிக்கத் தக்கதாகும். நாளை சட்டமன்றம் கூடும் சூழ்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலிருப்பவரைச் சிறைப்படுத்துவதைத் தவிர்ப்பது ஆளுங்கட்சியின் மீதான நன்மதிப்பை உயர்த்தும்.

தற்போதைய நிலையில், காவிரி நீர் உரிமைக்காக அனைத்துக் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் என யாவரும் இணைந்து குரல் கொடுப்பதற்கும்; இந்திய ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கும் இது ஏதுவாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கோவை சுண்டக்காமுத்தூர் பகுதியில் கன்னிமார் அம்மன் கோவிலில் ஆடி 18 சிறப்பு பூஜைகள் நிகழ்ச்சி



கோவை சுண்டக்காமுத்தூர் பகுதியில், கன்னிமார் அம்மன் கோவில் அமைந்துள்ளது. பழமை வாய்ந்த இந்த திருக்கோவில், 24 மனை, தெலுங்கு செட்டியார் சொப்பியர் வகுப்பினர் குலதெய்வ திருக்கோவிலாக அமைந்துள்ளது. இந்த திருக்கோவிலில் 2023 ம் ஆண்டு, கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில், இத்திருக்கோவிலில்சாமிதரிசனம் செய்யும், இச்சமூக மக்கள், ஆண்டு தோறும், ஆடி 18ம்தேதியில்மட்டும் சிறப்பு வழிபாடு,அபிஷேகங்கள் நடத்தி சிறப்பு விஷேச பூஜைகள் செய்வதுவழக்கம்இந்தநிலையில் இன்று ஆடி 18ஐ முன்னிட்டு, காலையில் கணபதி ஹோமத்துடன் துவங்கிய சிறப்பு வழிபாடுகள், யாக வேள்விகள் நடத்தி, ஓதுவாச்சாரியர்கள் வேத மத்திரங்கள் ஓதி, அம்மனுக்கு பால், பன்னீர், உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அபிஷேகங்கள் நடத்தி, சிறப்பு பூஜைகள்செய்யபட்டது.இதனை தொடர்ந்து கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதங்களும், அன்னதானமும்வழங்கிகொண்டாட பட்டது. இந்த சிறப்பு பூஜை வழிபாட்டு நிகழ்ச்சியில் சுமார் 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.இத்திருவிழாவுக்கான ஏற்பாடுகளை திருக்கோவில் தலைவர் அமிர்த லிங்கம்,செயளாலர் பாலு, பொருளாளர் பிரகாஷ்,துணைசெயலாளர் கண்ணையன்,துணை பொருளாளர் மகேந்திர பாபு, கௌரவ ஆலோசகர் தாமோதரன், உள்ளிட்டோர் செய்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குற்றாலம் சாரல் விழாவில் செங்கோட்டை ஏ.ஜி. தொடக்கப்பள்ளி மாணவிகளின் நடன நிகழ்ச்சி

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற குற்றாலம் சாரல் விழாவையொட்டி, பள்ளிக்கல்வித் துறைசார்பில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் செங்கோட்டைசரகத்தைச் சேர்ந்த செங்கோட்டை ஏ.ஜி. தொடக்கப் பள்ளி மாணவிகள் உற்சாகமான நடனநிகழ்ச்சியை வழங்கி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் சுந்தரி தலைமையில் ஆசிரியர்கள் ஏவாஞ்சலின் ராணி, முப்புடாதி, மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பெற்றோர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மாணவிகளின் கலைத் திறமையை பாராட்டினர்.



நடன நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை ஆசிரியர்கள் பிரபா, ஸ்டெல்லா பிரியா, ஜெயராணி, அமுதா ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டனர்.

நடன நிகழ்ச்சிக்கான அனைத்து பயிற்சிகளையும் ஆசிரியர் பிரான்சிஸ் செய்திருந்தார்.



மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டு துறை அமைச்சர்.ஜெகதீஸ்வரி அவர்களை சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து நாகர்கோவில் சமூக சேவகர் மற்றும் தவெக பிரமுகர் ஆர்.எஸ்.ராஜன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

# தென்காசி வடக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



சங்கரன்கோவில் பழைய பேருந்து நிலையம் எதிர்ப்புறம் உள்ள அசெம்பிளி லாட்ஜ் வைத்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கைமதன் தலைமையில் நடைபெற்றது தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஷமுனா, தென்காசி வடக்கு மாவட்ட நிதிச் செயலாளர் மணிகண்டன் சங்கரன்கோவில் ஒன்றிய செயலாளர் சங்கை வேல் சங்கரன்கோவில் நகர செயலாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மாநில தொழிலாளர் அணி செயலாளர் கலிவருணன்

தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் தென் தமிழரசு, ஆகியோர் சிறப்பு அழைப்பாளரக கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட் தீர்மாணங்கள்.. ஆகஸ்ட்-20 நெல்லையில் மற்றும் தென்காசி மாவட்டம் நெற்கட்டும் செவல் (ஆதித்தமிழர் பேரவை மாவீரன் ஒண்டிவீரனார் நினைவுநாளில் கடந்த 2009-ம் ஆண்டு முதல் 2026 வரை அருந்ததியர் உள் இடஒதுக்கீடு நடைமுறைப் படுத்தியது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட தமிழக அரசை வலியுறுத்தி அருந்ததியர் சமூகநீதி பாதுகாப்பு பேரணி நடத்த தீர்மானம் 2) வெள்ளை அறிக்கை வெளியிட கால தாமதமானால் தமிழக அரசை ஆளும் தமிழக வெற்றி கழகம் அரசு கண்டித்து போராட்டம் நடத்தப்படும் என பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது. கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் லட்சுமணன், ஒன்றிய செயலாளர்கள் வாசுதேவநல்லூர் ஒன்றிய தலைவர் கணேசன், கிளை நிர்வாகிகள் ஏந்தல்பட்டி கணேசன், காமராஜ் நகர் தினேஷ், புளியம்பட்டி கனகராஜ், ஊத்தான்குளம் குமரேசன் மற்றும் விஷால் , காந்தி, விஷ்ணு, கார்த்திக்,

இன்பராஜ், பரத், காமராஜர் நகர் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டணர்.



### சுரண்டையில் விவசாய சங்கங்கள் சார்பில்

# ஐம்பது ஆயிரம், எழுபத்து ஐந்தாயிரம் என ஏலம் விடாமல் விவசாய கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்

## கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் பேச்சு

ஐம்பது ஆயிரம் எழுபத்து ஐந்தாயிரம் என ஏலம் விடாமல் விவசாய கடனை முழுமையாக தமிழகஅரசு ரத்து செய்ய வேண்டும் என சுரண்டையில் விவசாய சங்கங்கள் சார்பில் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். சுரண்டை இலந்தைகுளம் பட்டாதாரர்கள் விவசாயிகள் சங்கம், அனைத்து விவசாயிகள் சங்கம்,இரட்டை குளம் பட்டாதாரர்கள் விவசாயிகள் சங்கம், மற்றும் சிறு,குறு விவசாய சங்கங்கள் சார்பில் முழுமையாக விவசாய கடனை ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சுரண்டையில் உள்ள சங்கரன்கோவில் ரோட்டில் அமைந்துள்ள தனியார் வங்கி முன்பு நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய விவசாயிகள் கடந்த திமுக,அதிமுக ஆட்சி காலத்தில் விவசாயிகளின் கடன் முழுமையாக ரத்து செய்யப்பட்டது. சினிமாவில் விவசாயிகளுக்கு ஆதரவு இருப்பது போல் நடித்த தமிழக முதல்வர் நிஜத்திலும் விவசாயிகளுக்கு ஆதரவாக விவசாய கடனை 50 ஆயிரம்,70 ஆயிரம் என ஏலம் விடாமல் விவசாய கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கைவைத்துள்ளனர்.

பட்ஜெட்டில் விவசாய கடனை தள்ளுபடி செய்யும் அறிவிப்பு இல்லை என்றால் விவசாய சங்கங்கள் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு பெரும் திரள் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெறும் என தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஊத்துமலை இளைய ஜமீன் குமரேச ராஜா, ராஜு வாத்தியார்,குத்தாலிங்கம், சிவகுமார், வெள்ளத்துரை, குமார்,ரலி, ஆறுமுகசாமி, வசந்தகுமார்,அழகு சாமி,அழகுதுரை, முருகன் யோகேஸ்வரர்,காசி,கோவிந்தராஜ், பாண்டியராஜா,பரமசிவ பாண்டியன், தட்சிணாமூர்த்தி, முருகேசன்,

திமுக முன்னாள் நகர செயலாளர்கள் ஆறுமுகசாமி,சக்தி மற்றும் திமுக நிர்வாகிகள், சாமுவேல் மனோகர், அண்ணப்பிரகாசம்,முருகன், காங்கிரஸ் மாவட்டத் துணைத் தலைவர் பால் என்ற சண்முகவேல், அதிமுக ராஜேஷ், மற்றும் ஏராளமான விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நெல்லையில் ஸ்கூட்டரில் சென்றவர் மீது திமுகவினர் சரமாரி தாக்குதல் வீடியோவால் பரபரப்பு



தஞ்சையில் நேற்று நடந்த திமுக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற உதயநிதி ஸ்டாலின் இரட்டை அர்த்தத்திலும்,சர்ச்சைக்குரியவகையிலும்பேசினார். இதையடுத்து உதயநிதி ஸ்டாலின் மீது தஞ்சை போலீசில் புகார் அளிக்கப்பட்டது.

புகாரையடுத்து, உதயநிதி ஸ்டாலினை சென்னை நீலாங்கரையில் உள்ள அவரது வீட்டில் வைத்து தஞ்சை போலீசார் இன்று கைது செய்தனர். அதேவேளை, உதயநிதியை விசாரணைக்குப்பின் இன்றே விடுதலை செய்வோம் என்றும் அவரை சிறையில் அடைக்கும் எண்ணமில்லை என்றும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, உதயநிதி ஸ்டாலின் கைதை கண்டித்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் திமுகவினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை,பல இடங்களில்திமுகவினர்வன்முறை சம்பவங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நெல்லை வண்ணாரப்பேட்டையில் உள்ள சாலையில் உதயநிதி ஸ்டாலின் கைதை கண்டித்து திமுகவினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, சாலையில் பைக்கில் சென்ற இளைஞரிடம் திமுகவினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர், அந்த இளைஞரை திமுகவினர் சரமாரியாக தாக்கினர். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பைக்கில் சென்ற இளைஞரை திமுகவினர் தாக்கும் வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

கர்நாடகாவில் இருந்து தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் வந்திருக்க வேண்டும். காவிரியில் ஒருசொட்டு தண்ணீர் கூட வரவில்லை. ஆனால் இதுபற்றி இன்று இருக்கும் முதல்-அமைச்சர் வாயை திறந்து பேசவில்லை.

முதல்-அமைச்சருக்கு இருக்கும் ஒரே கவலை திமுக மீது என்ன பொய் வழக்கு போடலாம் என்பதுதான் என்றார்.

அப்போது அங்கு கூடியிருந்த திமுகவினர், நடிகை ஒருவரின் பெயரை கூறி கூச்சலிட்டனர்.

அப்போது தொடர்ந்து பேசிய உதயநிதி ஸ்டாலின், எங்கே தண்ணீர் வருகிறதோ இல்லையோ அங்கே தண்ணீர்வரவேண்டும்...நான்காவிரியைகூறினேன் என்றார்.

### கோவை மருதமலை பகுதியில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில்

# திருவள்ளுவர் பல்கலைக்கழக தொழிலாளர் சங்கத்தின் சார்பாக கன்டன ஆர்பாட்டம் நடைபெற்றது

திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆய்வகத்தில், கடந்த ஜூலை 24ம் தேதி, பாலியல் சீண்டலுக்கு ஆளான மாணவிக்கு உரிய நியாயம் கிடைக்க வேண்டும்,திருவள்ளுவர் புகாரின், மீதான விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரணைக்கு வரவிடாமல் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட புகாரின் மேல்விசாரணையை முழுமையாக பாரதியார் பல்கலைக்கழக தொழிலாளர் சங்க செயலாளர் ரமேஷ் கூறியதாவது.. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பல்வேறு பாலியல் சீண்டல்களில்,



பல்கலைக்கழக உள்ளக விசாரணை குழுவிற்க்கு, தற்போது உள்ள, தலைமையை மாற்றம் செய்ய வேண்டும் எனவும்,2012ம் ஆண்டு முதல் திருவள்ளுவர் பல்கலைக்கழகநிர்வாகத்திடம் அளிக்கப்பட்ட பாலியல் புகார்களை, இன்று வரை மோசடியாக முடித்து வைத்து வரும், தற்போதைய தேர்வு கட்டுப்பாட்டு பொறுப்பு அலுவலர், முனைவர் பாபுஜனார்த்தனன் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், திருமணமான சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண் கொடுத்த செய்யக் கோரியும் சென்னை உயர்நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பின்படி, 2013 ஆம் வருடத்திய பாலியல் சீண்டல் குறித்து பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இன்று வரை நடவடிக்கை எடுக்காத திருவள்ளுவர் பல்கலைக்கழக நிர்வாகத்தைகண்டித்து,கோவை மருதமலை பகுதியில், உள்ள பாரதியார் பல்கலைக்கழக தொழிலாளர் சங்கம் நடத்தும் மாபெரும், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஈடுபட்டு வருபவர்கள் மீது உரியவிசாரணைநடத்தாமல், பாலியல் சீன்டலுக்கு ஆளாகும் நபர்களை தப்பிக்க வைக்கும் வகையில் தேர்வு கட்டுப்பாட்டு பொறுப்பு அலுவலர் செயல்பட்டு வருகின்றார், இவர் மீதும் இப் பல்கலைக்கழகத்தில் பாலியல் சீண்டலில் ஈடுபடும் நபர்கள் மீதும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார், இந்த பேட்டியின் பொழுது பாரதியார் பல்கலைக்கழக தொழிற்சங்க தலைவர் சாந்தாமணி உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விவசாய சங்கத்தின் கோரிக்கையை ஏற்று ஸ்பிக் நிறுவனம் பாய்மன வாய்க்கால் தூர்வாரும் பணியை தொடங்கி வைத்தனர்



முள்ளக்காடு – முத்தையாபுரம் – அத்திமரப்பட்டி பகுதி விவசாய சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, ஸ்பிக் (SPIC) உரத் தொழிற்சாலை நிர்வாகம் ஆண்டுதோறும் மேற்கொண்டு வரும்பாய்மனவாய்க்கால் தூர்வாரி சீரமைக்கும் பணி இன்று (04.08.2026) செவ்வாய்க்கிழமை காலை 10.35 மணியளவில் தொடங்கப்பட்டது.

இப்பணி தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு நடைபெறவுள்ளதாக ஸ்பிக்நிர்வாகம்தெரிவித்துள்ளது. இந்த தூர்வாரும் பணிகள் மூலம் மழைநீர் வடிகால் வசதி மேம்பட்டு, விவசாய நிலங்களுக்கு நீர்வரத்து சீராகும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த பணிகளை ஸ்பிக் நிறுவனத்தின் உதவி பொது மேலாளர் டி.ஜெயப்பிரகாஷ் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மக்கள்தொடர்புஉதவி மேலாளர் மணிகண்டன், முதுநிலை அலுவலர் சரவணன், விவசாய சங்கத் தலைவர் மற்றும் அப்பகுதி விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஆர்ப்பரித்து கொட்டும் அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி!



கேரளாவில் தொடர்ந்து கனமழை பெய்து வரும் நிலையில், திருச்சூர் அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சியில் மழை வெள்ளம் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

கேரள மாநிலம் திருச்சூர், இடுக்கி, வயநாடு, கோழிக்கோடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக நிலச்சரிவு மற்றும் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தொடர் கனமழை மற்றும் வெள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டு திருச்சூர், எர்ணாகுளம், வயநாடு உட்பட 12 மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்குமாவட்டநிர்வாகம்சார்பில்உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பரிக்கும் நீர்வரத்து

இந்த நிலையில் சாலக்குடி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையால், அதிரப்பள்ளி மற்றும் சார்ப்பா நீர்வீழ்ச்சிகளில்வரலாறு காணாதஅளவில்தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது. மேலும் கடந்த 1 மற்றும் 2ஆகிய தேதிகளில்அதிகப்படியானநீர்வரத்துமற்றும் அணை திறப்பு காரணமாக சுற்றுலா பயணிகளுக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டது.

நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் பாதைகள் வழுக்கும் தன்மையுடன் இருப்பதால், ஆற்றின் கரையோரங்களுக்குசெல்லவோஅல்லதுகுளிக்கவோ கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் முற்றிலும் தடை விதித்துள்ளது.





1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE

The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.



### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதைக் கண்டித்து

# தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் உட்பட நூற்றுக்கணக்கான திமுகவினர் கைது



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதையடுத்து, அதைக் கண்டித்து தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் பகுதியில் திமுகவினர் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாலை மறியல் போராட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசிய முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்ததாவது: "சட்டமன்றத்தில் தி.மு.க.வினரின் கேள்விகளுக்கும் விவாதங்களுக்கும் பதில் அளிக்க முடியாமல் திணறும் த.வெ.க. அரசு, பழிவாங்கும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினைக் கைது செய்துள்ளது. இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

த.வெ.க. அரசு தொடர்ந்து ஜனநாயக வழியிலான போராட்டங்களை முடக்கி, மக்களின் குரல்வளையை நெரித்து வருகிறது. இத்தகைய அடக்குமுறைகளுக்கு தி.மு.க. ஒருபோதும் அஞ்சாது." என்றார்.

முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் திரண்ட நூற்றுக்கணக்கான திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், கைது நடவடிக்கைக்கு எதிராகவும், காவல்துறையைக் கண்டித்தும் தீவிர முழக்கங்களை எழுப்பினர். இந்தத் திடீர் போராட்டத்தால் அப்பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தில் முதலமைச்சர் விஜய்

# ரூ.22.65 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற அம்ருத் 2.0 குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகளை சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்




ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகராட்சி, எல்லைமேடு பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ரூ.22.65 கோடி மதிப்பீட்டில் அம்ருத் 2.0 குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாகதிறந்து வைத்ததைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் பணிகளை நேற்று (04.08.2026) பார்வையிட்டார்.

பெருந்துறைநகராட்சியில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள பதிக்கப்பட்ட விநியோக குழாய்கள் சுமார் 40 ஆண்டுகள் முன்னர் அமைக்கப்பட்டுள்ளதாலும் அவைகள் அனைத்தும் பழுதடைந்து அடிக்கடி உடைப்பு குடிநீர் ஏற்படுவதாலும், நகராட்சி பகுதிகள் வளர்ச்சி அடைந்த பகுதிகளாக உள்ளதாலும் தற்போதைய மக்கள் தொகை மற்றும் குடிநீரின் தேவையினை பூர்த்திசெய்யும்பொருட்டும்.இந்நகர்பகுதி மக்களுக்காக சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் எல்லைமேடு பகுதியில் 1.5லட்சம்லிட்டர்கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை குடிநீர் நீர்த்தேக்கத்தொட்டிஅமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

மேலும், 117.26 கி.மீ நீளமுள்ள பகிர்மானக் குழாய் மற்றும் 2.010 கி.மீ நீளமுள்ள பிரதான குழாய் அமைக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. வீட்டு இணைப்பு 10,080 எண்ணிக்கை அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது. தற்போது மேற்கண்ட அனைத்து பணிகளும் நிறைவடைந்து நேற்று (04.08.2026) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருந்துறை நகராட்சிப் பொறியாளர் ஆர்.பழனிவேல், நகராட்சி மேலாளர் கே.எஸ்.பிரகாஷ், நகராட்சி சுகாதார ஆய்வாளர் கி. அருண்குமார், நகராட்சிபணியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், அம்மாபாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் இசேவை மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (4.8.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் ஊராட்சி 1010 குடியிருப்பு பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சிறிய அளவிலான இயற்கை உரம் தயாரிக்கும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (4.8.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை, முகாசிப்பிடாரியூர் அரசு உயர்நிலைப்பள்ளி சமையல் இருப்பு அறையில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்க சமைக்கப்பட்டிருந்த மதிய உணவின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (4.8.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# ஆணவம் அழிவுக்கு வழிவகுக்கும்

## உதயநிதி கைது விவகாரத்தில் முதலமைச்சர் விஜய்க்கு தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கண்டனம்



சென்னை: ஆணவம் அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர்ச்சியான ஆணவம் அழிவை விரைவுபடுத்தும் என்று உதயநிதி கைது விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் விஜய்யை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடுமையாக சாடியுள்ளார்.

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது விவகாரம் தமிழக அரசியலில் புயலை கிளப்பி உள்ளது. உதயநிதியின் சர்ச்சைப் பேச்சுக்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், தமிழக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் இந்த விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் விஜய்யை கண்டித்து விரிவான அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், 'காவிரியில் தமிழ்நாட்டுக்கான உரிமையை நிலைநாட்ட துப்பு இல்லாத, மேகதாது அணையைத் தடுக்க முதுகெலும்பு இல்லாத த.வெ.க. அரசின் அலட்சிய ஆணவப் போக்கைக் கண்டித்து தஞ்சையில் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தின் எழுச்சி ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கொந்தளிப்பை உணர்த்துவதாக அமைந்திருந்தது. கழக உடன்பிறப்புகளோடு உழவர் பெருமக்களும் பொதுமக்களும் பங்கெடுத்து தங்களது உணர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி, த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்தை மிகக்கடுமையாக அம்பலப்படுத்தி விமர்சித்தார்.

"நிர்வாகத் திறனற்ற டம்மி முதலமைச்சரால் காவிரிநீரைக்கொண்டு வர முடியவுமில்லை, மேகதாது அணையைத் தடுக்க பேசவும் முடியவில்லை, விவசாயிகள் வேதனையில் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள், ஆனால் அமைச்சர்களோ முதலமைச்சர் நடித்த படத்தை பார்த்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள், ஜோக்கர் அமைச்சரவை தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது" என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சித் தலைவர் வைத்தார். இதற்கு இதுவரை ஆட்சியாளர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

காவிரி பிரச்னையில் அரசின் தோல்வி வெளிச்சத்துக்கு வந்துவிட்டதை மறைக்கும் வகையில், பிரச்சினையையே திசை திருப்பும் வகையில் இன்று காலையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி வீட்டுக்கு வந்த போலீஸ் படை அவரை அராஜகமாக கைது செய்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் என்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் அவரைக் கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றுள்ளது த.வெ.க. அரசு. பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்திருப்பதன் மூலமாக உதயநிதியை மிரட்டப் பார்க்கிறார்கள்.

நாளை சட்டமன்றம் கூட இருக்கிறது. நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறார்கள். அப்போது கேபினெட் தகுதி பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவையில் இருக்க வேண்டும். ஆனால் இருக்கக்கூடாது என்று நினைத்து இந்த நடவடிக்கையைத் தொடங்கி இருக்கிறார்கள்,' என்ற குற்றம்சாட்டியுள்ளார்.

# சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோவில் நில ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி இந்து மக்கள் கட்சி மனு



சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, கோவிலை புனரமைத்து பொதுமக்கள் வழிபாட்டிற்கு திறக்க நடவடிக்கை எடுக்கக் கோரி இந்து மக்கள் கட்சி சார்பில் வேலூர் இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் விஜயாவிடம் இன்று மனு அளிக்கப்பட்டது.

வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே. மோகன் தலைமையில் அளிக்கப்பட்ட மனுவில், கோவிலுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு நிலத்தை உடனடியாக மீட்டு, கோவிலை புனரமைத்து பொதுமக்கள் வழிபாட்டிற்கு திறந்து வைக்க வேண்டும். மேலும், தினசரி பூஜைகள் மற்றும் விளக்கேற்றி வழிபாடு நடைபெற தேவையான நடவடிக்கைகளை இந்து சமய அறநிலைத்துறை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வேலூர் மாவட்டத் தலைவர் அச்சுதன், மாவட்டச் செயலாளர் பார்த்திபன், ஆன்மீகப் பெரும் மாவட்டத் தலைவர் ஸ்ரீதர், மாவட்டப் பொருளாளர் சம்பத், வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார், வாலாஜா கிழக்கு ஒன்றியத்தலைவர் அன்பழகன், வாலாஜா ஒன்றியச் செயலாளர் மணிவண்ணன், சோளிங்கர் கிளைத் தலைவர் பாஸ்கர், கிளைப் பொருளாளர் அன்பு, கிளைச் செயலாளர் சின்னப்பா, பொதுச் செயலாளர் பாஸ்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட வேலூர் இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் விஜயா, கோரிக்கைகள் தொடர்பாக உரிய ஆய்வு மேற்கொண்டு தேவையான நடவடிக்கைஎடுக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும், இதே கோரிக்கையை வலியுறுத்தி திருவள்ளூர் இந்து சமய அறநிலைத்துறைஇணை ஆணையரிடமும் மனு வழங்கப்பட்டது.

# Air India PhuketDelhi flight drops 300 feet after turbulence, 10 passengers, 4 crew members injured



*Air India said that its flight AI2379, operating from Phuket to Delhi, on Tuesday experienced a turbulence-related event that caused a momentary change in the aircraft's altitude. The sudden drop in the altitude caused minor injuries to a few passengers and crew members, it said.*

*A total of 14 people onboard, including 10 passengers and 4 crew members, are said to have suffered injuries in the Air India flight turbulence incident. They have been shifted to Medanta Hospital in Gurugram and India Spinal Injury Centre in Vasant Kunj, an official told HT on condition of anonymity.*

*An official of the aviation regulatory body, the Directorate General of Civil Aviation (DGCA), said that the pilot reported a sudden loss of altitude, of approximately 300 feet, during the flight.*

*"The pilot in command reported a severe injury to one cabin crew member, injury to another and minor injuries to a few passengers due to a sudden loss of approximately 300 feet altitude," the official said.*

*Sources said that Delhi airport was immediately alerted, and medical teams were rushed to receive the passengers immediately upon landing.*

*The flight took off from Phuket at 8:25 am and landed in Delhi at 11:00 am, according to data on flightradar24.com.*

*The aircraft landed safely at Delhi's Indira Gandhi International Airport where all passengers and crew disembarked safely, Air India said, adding that no serious injuries were reported.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.